**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**வழக்கு எண் :OS No: 12/2016 தேதி:29.01.2025**

**பி.வா.சா. 1 – சங்கரவேல்**

**குறுக்கு விசாரணை :** ( 1ம் பிரதிவாதி தரப்பில்)

நான் தற்போது ஆசிரியராக வேலை பணிசெய்கிறேன். இன்று விடுமுறை எடுத்து சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். கோபுரம்தாங்கிவீரப்பத்திரன்செட்டியார் தாவா சொத்து பாத்தியமாகும். 96 சென்டுக்கு வழக்கு நடக்கிறது. தாவா சொத்து கோபுரம்தாங்கிவீரப்பத்திரன்செட்டியாருக்கு சொந்த கிரைய பாத்தியமாகும். 1905 ஆண்டு கிரையப்பத்தியாமாகும். வாதிகள் தாக்கல் செய்துள்ளார்களா என்று எனக்கு தெரியாது. நான் எதுவும் தாக்கல்செய்யவில்லை. நான் விவரம் சொல்லி வழக்கறிஞர் எதிருரை தாக்கல் செய்துள்ளார். அதில் கூறியுள்ள விவரங்கள் அனைத்தும் சரிதான். தாவா சொத்தில் சமாதி உள்ளது. ஆதியில் கோபுரம்தாங்கி என்பது மூலிகை. கோபுரம்தாங்கி என்பது வீரப்பத்திரன்செட்டியாருக்கு புனை பெயராக வந்தது. கோபுரம்தாங்கிவீரப்பத்திரன்செட்டியாரின் வாரிசு தான் நாங்களும் வாதிகளும் என்றால் வாதிகள் வாரிசு கிடையாது. கோபுரம்தாங்கிவீரப்பத்திரன்செட்டியாருக்கு இரண்டு பிள்ளைகள். வீரப்பன் மற்றும் வீரலிங்கம் ஆவார்கள். வீரப்பனுக்கு முதல் தாராத்து மகன் அண்ணாமலைசெட்டியார் மற்றும் 5 பெண்பிள்ளைகள் வாரிசு ஆவார்கள். அண்ணாமலைசெட்டியாருடன் உடன்பிறந்தவர்கள் 5 பெண் பிள்ளைகள். வீரப்பன்செட்டியாருக்கு 2வது தாராத்திற்கு இரண்டு ஆண். ஒரு பெண். ராமசந்திரசெட்டியார், சக்திவேல் மற்றும் வீரலட்சுமி ஆகியோர்கள். ராமசந்திரன் இறந்துபோனார். ராமசந்திரனுக்கு சங்கரவேல், ராஜேஸ்வரி ஆகியோர்கள் வாரிசுகள். அண்ணாமலைசெட்டியாருக்கு 1ம் பிரதிவாதி வீரமணி மகன் மற்றும் 3 பெண்பிள்ளைகள் வாரிசுகள். அண்ணாமலைசெட்டியாருடன் உடன்பிறந்த 5 பெண்பிள்ளைகளின் பெயர்கள் ஞாபகம் இல்லை. இறந்துபோன வீரயைாவிற்கு 4 ஆண் பிள்ளைகள். அவர்களின் பெயர் தெரியாது. 1ம் வாதியின் ராஜேந்திரன் வீரயைா மகன் என்றால் சரிதான். 3ம் வாதி குணாளன் வீரையா மகன் என்றால் சரிதான். 1ம் வாதி இறந்துபோனார். 1ம் வாதிக்கு 2 மகன்கள், 1 பெண் ஆவார்கள். அவர்கள்

ராதாகிருஷ்ணன், வேலுமணி, சாந்தி ஆவார்கள். எதிர்வழக்குரையில் தாவா சொத்து 29.07.1956 தேதியில் வீரப்பன்செட்டியார் தானசெட்டில்மெண்டு எழுதி கொடுத்துவிட்டதால் உறவின்முறைக்கு பாத்தியப்பட்டது என்று சொல்கிறேன் என்றால் சரிதான். அதை நான் படித்து பார்க்கவில்லை. தானசெட்டில்மெண்டு பத்திரத்தில் உறவின்முறைக்கு பாத்தியப்பட்டது என்று எழுதி கொடுக்கவில்லை என்றும் அன்னதானம் போன்ற மேற்பார்வைக்கு தான் எழுதி கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு பட்டா வீரலிங்கசெட்டியார் பெயரில் உள்ளது என்றால் உறவின்முறை பெயரில் தான் உள்ளது. 10-15 வருடங்களுக்கு முன்னால் மாறியது. அதற்கு முன்பு கோபுரம்தாங்கிவீரப்பத்திரன்செட்டியார் பெயரில் இருந்தது. தானசெட்டில்மெண்டு பத்திரத்தை படித்து பார்க்காமலேயே சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து உறவின்முறைக்கு பாத்தியமில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து 1ம் பிரதிவாதிக்கு 1/6ல் பாகம் உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து ரோட்டிற்கு மேல் இருப்பதால் நான் அபகரிக்க வேண்டும் எண்ணத்தில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் மயானத்திற்கு செட்டு போடலாம் என உறவின்முறை தீர்மானித்துள்ளது. பழைய கட்டிடத்தை இடித்துவிட்டு அந்த அஸ்வாரத்தில் மேல் வேறு கட்டிடம் கட்ட உள்ளோம். தண்ணீர் மற்றும் அன்னதானம் வழங்குவதற்காக பழைய கட்டுமானம் அமைப்பு போன்றே புதுப்பித்து கட்ட உள்ளோம். உறவின்முறைக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை :** ( 9 முதல் 12 பிரதிவாதிகள் மற்றும் வாதிகள் தரப்பில்)

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.